Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# Feminist Thought in the Short Story Veetin Moolayil Oru Samayalarai

**S. Arunkumar,** P.G. Scholar, Department of Tamil, Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur, Tamil Nadu, India
**ORCiD: https://orcid.org/0009-0000-6828-0916**
**Dr. K. Nagendran**, Assistant Professor of Tamil, Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-2865-7832**
**DOI: 10.5281/zenodo.14744425**

## Abstract

*Ambai is a Tamil writer. Ambai's short story "Veetin Moolayil Oru Samayalarai" (Kitchen in the Corner of the House) has caught everyone's attention in the Tamil reading community. She writes about how women are maltreated in the family where men treat them as slaves forever. A woman is needed only for cooking and no family head considers her as his wife, daughter or daughter-in-law as equals of the men of the family. According to them, a woman who comes to their house after getting married is considered to be a cook. The short story "Veetin Moolayil Oru Samayalarai" is the best example of it. The character Babaji who is the head of the family in this story does the consider the women as talented women. Women who suggestions to fulfil their needs are ignored. In the short story, the woman protagonist Meenakshi tells Babaji about expanding the kitchen. He ignores that and builds another room which is not needed. It shows the patriarchal domination and hegemony of the family. Hence, Ambai has written about such patriarchal trends and the cruelties that happen to women in a family. This article studies the feminist thoughts in the short story "Veetin Moolayil Oru Samayalarai".*

**Keywords:** Ambai, Short Story, *Veetin Moolayil Oru Samayalarai*, Feminism.

## References

[1] Ambai.*Veetin Moolaiyil Oru Samayalarai*. Kalachuvadu Pathippagam.
[2] Ambai. *Velippadu.* https://archive.org./details/orr-11824_Velippaadu Accessed on 23 Dec 2024.
[3] Bharathiyar. *Bharathiyar Kavithaigal.* Sri Indu Publication, Chennai -17.
[4] Prema, R. *Penniyam*. World Tamil Research Institute, Taramani, Chennai.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

# *வீட்டின் மூலையில் ஒரு சமையலறை* சிறுகதையில் பெண்ணியச் சிந்தனை

**ச. அருண்குமார்,** முதுகலைத்தமிழ் முதலாமாண்டு, ஸ்ரீ எஸ். இராமசாமி ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0000-6828-0916**
**முனைவர் கி. நாகேந்திரன்,** தமிழ் உதவிப்பேரசிரியர், ஸ்ரீ எஸ். இராமசாமி ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-2865-7832**
**DOI: 10.5281/zenodo.14744425**

**ஆய்வுச் சுருக்கம்**

*அம்பை எழுதிய "வீட்டின் மூலையில் ஒரு சமையலறை" என்னும் சிறுகதை அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. பெண்களை ஆண்கள் என்றென்றும் அடிமைகளாக நடத்துவதை பொதுவெளியில் நிகழ்ந்ததை பதிவு செய்யாது ஒரு குடும்பத்தில் அவள் எவ்வாறு நடத்தப்படுகிறாள், அங்கு அவள் படும் துயரங்கள் என குடும்பங்களில் பெண்கள் நடத்தப்படுவதை எழுதியுள்ளார். சமைக்க மட்டுமே பெண் தேவைப்படுகிறாள். அவள் தன் மனைவி என்றோ, மகள் என்றோ, மருமகள் என்றோ எந்த குடும்பத்தலைவனும் எண்ணுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் திருமணமாகி தங்கள் வீட்டிற்கு வந்தவர்கள் சமையல் பணிக்கு வந்தவர்களே என்று எண்ணுகிறார்கள். இதையே இக்கதையில் வரும் பப்பாஜி என்ற குடும்பத்தலைவரும் செய்கிறார். பெண்கள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய கருத்ததுகளை முன்வைத்தாலும் அதை அலட்சியப்படுத்தி அதைச் செய்து கொடுப்பதில்லை. "வீட்டின் மூலையில் ஒரு சமையலறை" என்ற இச்சிறுகதையிலும் பப்பாஜியிடம், மீனாட்சி சமையலறையை விரிவுபடுத்துவது பற்றி கூறுகிறாள். ஆதை அலட்சியப்படுத்திவிட்டு தேவையில்லாத வேறு அறையைக் கட்டி முடிக்கிறார். இத்தகைய ஆணாதிக்கப் போக்கைச் சுட்டிக்காட்டி பெண்களுக்கு நிகழும் கொடுமைகளை அம்பை அவர்கள் எழுதியுள்ளார். அதைப்பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் சாரம்சமாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** அம்பை, சிறுகதை, *வீட்டின் மூலையில் ஒரு சமையலறை*, பெண்ணியம்.

**முன்னுரை**

பெண் என்பவள் சக்தியின் குறியீடு. அவள் உயிர்களைப் பிறப்பிப்பவள். பிறந்த உயிர்களுக்கு உணவோடு உணர்வையும், ஊட்டி வளர்ப்பவள் அவளைப் பாராட்டுவதன் மூலம் உலகைப் பாராட்டுகிறோம். அறிவதன் மூலம் உலகை அறிகிறோம். மொத்தத்தில் உலகின் உன்னதம் அவள். அவள் வாழ்வில் இன்பம், துன்பம் என இரண்டும் உண்டு என்றாலும் துன்பத்தின் மூலம் அவளின் தூய்மை துலக்கம் பெறுகிறது. உண்மை வாழ்விலும் இலக்கிய வாழ்விலும் துன்பமே பெண்களுக்கு பெருந்துணையாய் இருந்துள்ளது.

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

கண்ணகியின் இன்பம் எத்தனை நொடிகள் என்று கணக்கிட்டுவிட முடியும். மாதவியின் சோகம் எவ்வளவு நெடியது என்று தெரிந்ததே. மணிமேகலையின் மனக்கவலை மாற்றல் அரிது. ஔவையின் தனிமை, ஆட்டனத்தியின் காதல், அமராவதியின் தோல்வி, புனிதவதியின் வாழ்க்கை எனச் சோகத்தைச் சுமந்த பெண்களின் வாழ்க்கையே வரலாற்றின் பக்கங்களில் நிறைந்து கிடக்கக் காண்கிறோம். இந்த வரிசையில் பெண்ணியப் படைப்பாளுமைகளுள் ஒருவரான அம்பை அவர்களின் "வீட்டின் மூலையில் ஒரு சமையலறை" என்ற சிறுகதையைப் பொருத்திப் பார்த்து ஆய்வதே இக்கட்டுரை எனலாம்.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்ற சொல் "தத்துவம்" அல்லது "கோட்பாடு" என்ற சொற்களின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. பெண்களின் முன்னேற்றத்திற்கான கோட்பாட்டு அடிப்படையிலான இயக்கம் என்றும் எடுத்துக்கொள்ளலாம். "பெண்ணியம்" என்பதற்கு பல விளக்கங்கள் தரப்பட்டு வருகின்றன. அவ்விளக்கங்களுக்கிடையே வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையில் அவை 'பெண்ணியம்' என்பதற்கு 'பாலியல் சமத்துவம்' என்ற பொருளைத் தந்து நிற்கின்றன. பரந்த அளவில் 'பெண்ணியம்' என்ற சொல் பெண் எந்த ஆணுக்கும் நிகரானவளே! எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும், அவள் அடக்கி வைக்கப்படக்கூடாது, தனிமைப்படுத்தி வைக்கப்படக்கூடாது, சார்புநிலைப்படுத்தக்கூடாது என்று பொருள்படுகிறது. (பிரேமா, இரா. பக். 2) பெண்ணியம் என்ற இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு "வீட்டின் மூலையில் ஒரு சமையலறை" என்ற சிறுகதை ஆய்வு செய்யப்படுகிறது.

**கதைஅமைப்பு**

வீட்டின் மூலையில் ஒரு சமையலறை என்னும் இச்சிறுகதை கூட்டுக்குடும்ப வாழ்க்கையைப் பின்பற்றி வாழ்கின்ற இராஜஸ்தானில் உள்ள ஒரு குடும்பத்தை மையப்படுத்தி கதையை வடிவமைத்துள்ளார் கதையாசிரியர் அம்பை அவர்கள். இக்குடும்பத்தின் மூத்த உறுப்பினர் பப்பாஜி ஆவார். இவருடைய தாயார் படிஜீஜி. பப்பாஜியின் மனைவி பெயர் ஜீஜி. இக்குடும்பத்தின் மூத்த மருமகளே சமையலறைப் பொறுப்பை நிர்வகிக்கும் அதிகாரம் படைத்தவராகக் கருதப்படுகிறார். அவ்வகையில் சமையலறையின் முழு அதிகாரமும் படிஜீஜியின் கையில் இருந்தது. அதன்பிறகு ஜீஜியிடம் கைமாறியது. இக்கூட்டுக்குடும்பத்தில் 20க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் உணவு தயாரிக்கும் பொறுப்பு ஜீஜிக்குதான். காலையில் விடிந்ததும் டீ, காபி தொடங்கி இரவு உணவு வரை அனைத்தையும் தயார் செய்ய வேண்டும். இப்படி அதிகப்படியான உறுப்பினர்களுக்கு சமையல் செய்யும் இடம் பொதுவாகவே அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் இவர்களுடைய சமையலறை இரயில் பெட்டி போன்ற நீண்டிருக்கும் வீட்டின் கடைசி மூலையில் ஏதோ போனால் போகிறது என்ற எண்ணத்துடன் அமைக்கப்பட்டது போல்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

இருக்கிறது. இந்தச் சமையலறையும், சமையல் செய்யும் வேலையும் தான் ஜீஜியின் வாழ்க்கையாகவே உள்ளது. இத்தகைய கதை அமைப்பில் ஒரு கூட்டுக்குடும்பத்திற்குள்ளாகவே பெண்களுக்கு எதிராக நடக்கும் அடக்கு முறைகளை பின்வரும் பகுதிகளில் அறியலாம்.

**எரிச்சலூட்டும் செயல்கள்**

பொதுவாக வீட்டிற்கு விருந்தினர் யாரேனும் வந்தால் வந்தாரை உபசரிப்பது வழக்கம். அப்போது நீரோ அல்லது வேறு ஏதேனும் பானகமோ கொடுத்து உபசரிப்பது வழக்கம். சில வேளைகளில் நாம் உணவு உண்ணுகிற நேரத்திற்கு வந்தால் வந்தவர்களையும் உணவு உண்ணச் செய்து உபசரித்து அனுப்புவது வழக்கம். இந்தச் சிறுகதையிலும் இந்த வழக்கத்தையே பின்பற்றினாலும், உணவு தயாரிப்பவர்களுக்கு எரிச்சலூட்டும் விதமாக உள்ளதை அறிய முடிகிறது. "சமையலறை மூலையில் ஒரு கும்மட்டி அடுப்பில் சாய் செய்யத் தண்ணீர் கொதித்தவாறே இருக்கும். சாப்பிடும் சமயத்தில் வீட்டு வாசலில் யாராவது தெரிந்தவர் வந்துவிட்டால் முதலில் 'ஜில்'லென்று தண்ணீர். சாப்பிடுங்களேன். 'சாச்சாவுக்கு ஒரு தட்டு கொடு' என்று ஆரம்பிப்பார் பப்பாஜி. 'இல்லை சும்மா இப்படி வந்தேன்.' சரி, சாய் குடிக்க என்ன வந்தது?' 'வேண்டாமே.' 'காப்பி?' 'தண்ணீர் போதும்.' 'அதெப்படி வெறும் தண்ணி. கொஞ்சம் சர்பத் போட்டுக் குடியுங்கள்.' 'சரி.' ஜீஜி எழுந்திருப்பாள். 'அப்படியே ஒரு தட்டில் ரெண்டு கபாப் கொடு.' ஜீஜி சமையலறையை எட்டும் முன் காலையில் செய்த வெந்தயக் கீரை பரோட்டா பப்பாஜிக்கு நினைவு வரும்.

> **ஸனியேஜி என்று மனைவியை விளிப்பார். அந்த மேதி பரோட்டாவும் ரெண்டு சூடாக்கி வெண்ணெய் தடவிக் கொண்டு வா. சாச்சா ருசி பார்க்கட்டும் என்பார். வந்தவர் தோல்வியை ஒப்புக் கொள்வார். நான் சாப்பிட்டே விடுகிறேன். (அம்பை)**

இவ்வாறாக வந்தவர்களை வலுக்கட்டாயமாக உண்ணவைப்பதோடு மட்டுமல்லாமல் கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் மிகுதியான நபர்களுக்கு உணவு தயார் செய்துவிட்டு சற்று இளைப்பாற அமர்ந்தால் அவர்களை தங்கள் வீட்டு வேலைக்காரிபோல் நினைத்து, நினைத்ததையெல்லாம் செய்து கொண்டு வரச் சொல்லுவது அக்குடும்பத்துப் பெண்களை எரிச்சலூட்டும் விதமாகத் தெரிகிறது. பொதுவாகவே இதுமாதிரியான நிகழ்வுகள் அனைத்துக் குடும்பங்களிலும் நிகழ்கிறது.

ஆண்கள் தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டுவது போல உத்தரவு பிறப்பித்து விட்டு வந்தவர்களுடன் கதையடித்துக் கொண்டிருப்பார்கள். உள்ளே சமையல் செய்து கொண்டிருப்பவள் அவளும் பெண்தானே. அவளும் நம்மைப் போன்ற ஒரு ஜீவன் தானே. அவளுக்கும் சற்று இளைப்பாறவோ, பொழுதுபோக்கவோ, பாடல்கள் கேட்கவோ இது போன்ற ஆசைகள் இருக்கத்தானே செய்யும். அதை எல்லாம் இச்சிறுகதையில் வரும் பப்பாஜி போன்ற எண்ணம் கொண்ட ஆண்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இம்மாதிரியான

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



செயல்களால் பெண்கள் உடலளவிலும் சரி, மனதளவிலும் சரி பெரிய அளவில் பாதிக்கப்படுகிறார்கள். இச்சூழ்நிலையில் ஆண்கள் பெண்களுக்கான வேலைப்பளுவைக் குறைக்க வேண்டும் அல்லது தானும் உடன் சேர்ந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும்.

**அலட்சியப்போக்கு**

சமையலறையின் தோற்றம் மிகச் சிறியதாகவே இச்சிறுகதையில் கூறப்பட்டுள்ளது. அதை நோக்கும் போது மூவர் அந்தச் சமையலறையில் வேலை பார்க்கலாம்.

> **ஒரு சன்னலின் கீழ் குழாய் வைத்த தொட்டி. ஒரு பெரிய தட்டுக்கூட வைக்க வகையில்லாமல் குறுகியது. கீழே, செங்கல் தடுப்பு இல்லாமல் சாக்கடை முற்றம். மேலே குழாயைத் திறந்ததும் கீழே பாதங்கள் குறுகுறுக்கும். பத்து நிமிடங்களில் ஒரு வெள்ளக்காடு காலடியில். அதில் நின்றுநின்று அடிப்பாதம் எல்லாம் வெடிப்புக் கீறல்கள். சமையலறையில் அடி வைத்து, முதல்நாள் சமைத்து, கைக்குத் தங்க வளையல் போட்ட உடனேயே வெடிப்புக்குத் தடவ ஒரு மெழுகுக் களிம்பு தந்துவிடுவாள் ஜீஜி என்று எல்லோரும் கூப்பிடும் கிசணின் அம்மா.(அம்பை).**

இப்படி அந்த வீட்டின் சமையலறை அமைப்பு இருக்கும். இவர்கள் குடும்பத்திற்கு வரும் புதுமணப் பெண்ணிற்கு கையில் தங்க வளையல் போடும் போதே சமையலறையில் வேலை பார்க்கும் போது பாதத்தில் ஏற்படும் புண்ணிற்கு களிம்பு தந்துவிடுவது வழக்கம் என்பதை அறிய முடிகிறது.

பப்பாஜி இப்போது குடியிருக்கும் வீட்டில் ஒரு அறைகட்ட முடிவு செய்தார். அப்போது கிசணின் மனைவி மீனாட்சி, சமையலறையை அகலப்படுத்தினால் நல்லது என்று தன்னுடைய அபிப்ராயத்தைக் கூறினாள்.

> **பப்பாஜி தொண்டையைச் செறுமிக்கொண்டு, எதற்காக என்றார். இந்தச் சமையலறை தொட்டி ரொம்ப சின்னது. தண்ணி வேறு சரியாய் போவதில்லை. வேலைக்காரி பாத்திரம் தேய்த்தால் சமையலறை முழுவதும் தண்ணீர் நிற்க முடிவதில்லை (அம்பை)**

என்று கூறுகிறாள். ஆனால் கட்டவேண்டும் என்று முடிவு செய்யப்பட்ட அறை கட்டிமுடித்தாகிவிட்டது. ஆனால் சமையலறையில் எந்த மாற்றமும் நிகழவில்லை. பெண்கள் தங்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கச் சொன்னால் இப்படி அலட்சியப் போக்குடன் செயல்படும் ஆண்கள் இருக்கின்றனர். அம்பை அவர்கள் ஆண்களின் அலட்சியப்போக்கை இச்சிறுகதையில் தெரியப்படுத்தியுள்ளார்.

**அதிகாரம்**

குடும்பத்தில் அதிகாரம் ஆண்களுக்கா? பெண்களுக்கா? என்று நோக்கும்போது, ஒரு அரசாங்கத்தை தான் நடத்துவது போன்றும், தான் அதில் உயர்ந்த அதிகாரி போன்றும் நினைத்து அந்த வீட்டு ஆண்கள் அதிகாரம் செய்கின்றனர். ஜீஜிக்கு உடல்நிலை சரியில்லாமல்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

போனபோது மீனாட்சி ஜீஜியிடம் அமர்ந்து பேசினாள். அப்போது ஜீஜி இந்த வீட்டிற்கு புதுமணப் பெண்ணாக வந்ததை நினைக்கிறாள்.

> **ஞாபகம் வருது… எல்லாம்… முப்பது பேர் வீட்டில். அஞ்சு கிலோ 'ஆட்டா' பிசைவேன். முந்நூறு சப்பாத்தி இடுவேன். முதல் தடைவ இரண்டு உள்ளங்கையும் ரத்தம் கட்டி நீலமாய் இருந்தது. தோள் பட்டையில் குத்திக் குத்தி வலித்தது…பப்பாஜி சொன்னார்….சபாஸ்….நீ நல்ல உழைப்பாளி என்று (அம்பை).**

இவ்வாறு தான் வந்த நாட்களில் இருந்து இந்த வீட்டில் சமையல் வேலைதான் செய்து கொண்டு இருக்கிறேன் என்று கூறுவது போல உள்ளது. ஜீஜி மீனாட்சியிடம் தான் ஒரு ராணி போல் வாழ்ந்துள்ளதாகவும், அதிகாரம் முழுமையும் தன்னிடமே இருந்தது என்றும் கூறுகிறாள். மீனாட்சி ஜீஜியிடம், 'ஜீஜி அந்தச் சமையலறை, அட்டிகை, வளை தங்கக்குண்டு-சுட்டி அதிலெல்லாம் ஒரு பலமுமில்லை. **"அதிகாரம் அதிலிருந்து வரவில்லை. அது பப்பாஜியை ஒட்டிய அதிகாரம். அதிலிருந்து எல்லாம் விடுபடுங்கள். (அம்பை)"** 'எல்லாவற்றையும் துறந்த நீங்கள் தான் அறுபட்ட நீங்கள்' என்று கூறுகிறாள். அதிகாரம் முழுமையும் தன்னிடம் இருந்ததாக நினைத்த ஜீஜியின் மடத்தனத்தை அகற்றினாள் மீனாட்சி. சுமையலறையைச் சுற்றிய வேலைகளை மட்டுமே தன் அதிகார வரம்பிற்குட்பட்டதாக நினைத்து தான் அதிகாரியாக, ராணியாக இருப்பதை எண்ணியிருக்காவிட்டால், மூளையின் இழுப்பறைகளை இவற்றையெல்லாம் போட்டு நிரப்பியிருக்காவிட்டால்,

> **ஒருவேளை நீங்கள் அந்த ஆப்பிள் விழுவதைப் பார்த்திருக்கலாம், தண்ணீர் கெட்டிலின் மூக்கு நுனி ஆவியைப் பார்த்திருக்கலாம், புதுக்கண்டங்களைக் கண்டுபிடித்திருக்கலாம். கைலாஸ பர்வதத்தில் அமர்ந்து காவியம் எழுதியிருக்கலாம், குகைகளுக்குள் ஓவியம் தீட்டியிருக்கலாம், பறந்திருக்கலாம், போர்கள், சிறைகள், தூக்கு மரங்கள், ரஸாயன யுத்தங்கள் இல்லாத உலகத்தை உண்டாக்கியிருக்கலாம். (அம்பை)**

என்று எழுச்சியூட்டும் சொற்களை ஜீஜியிடம் கூறினாள். இதே சூழ்நிலையை அம்பையின் வேறொரு சிறுகதையான "வெளிப்பாடு" என்ற சிறுகதையிலும் அறியலாம். இச்சிறுகதையில் வரும் ஜீஜி போன்றே "வெளிப்பாடு" சிறுகதையிலும் "அண்ணி" கதாப்பாத்திரமும் சமையலறையே வாழ்க்கை என்று வாழ்ந்துள்ளார். அவள் தினமும் தோசை சுடுகிறாள். பதினான்கு வயதில் திருமணம் செய்து வைக்கப்பட்டவள். அங்கும் தினமும் தோசை சுடுகிறாள்.

> **பத்து வயசு தொடங்கி சுடறேன். நாப்பது வருஷத்துல ஒரு நாளைக்கு இருபது மேனிக்கு எவ்வளவு தோசை... அம்மம்மா… ஒரு வருடத்துக்கு ஏழாயிரத்து முந்நூறு தோசைகள். நாற்பது வருடங்களில் இரண்டு லட்சத்து தொண்ணூற்றிரண்டாயிரம் தோசைகள். இது தவிர இட்லிகள், வடைகள், அப்பங்கள், பொரியல்கள், குழம்புகள். எவ்வளவு கிலோ அரிசி சமைத்திருப்பாள்? (அம்பை)**

இதைப் போன்றே ஜீஜி சுட்ட சப்பாத்திகளையும், பூரிகளையும் எண்ணினாள் எவ்வளவு இருக்கும். இவ்வாறாக இப்பெண்கள் சமையலறையே தங்களுடைய ராஜ்ஜியம் என்று நினைக்கின்றனர். எவையெல்லாம் அதிகாரம் என்று ஜீஜி நினைத்துக் கொண்டிருந்தாளோ, அவை எல்லாம் அதிகாரம் இல்லை. எல்லாவற்றையும் துறந்து எப்போது உலகுடன் தொடர்பு கொள்ள நினைக்கிறோமோ அப்போதுதான் நாம் அதிகாரம் படைத்தவராக மாற இயலும்.

**முடிவுரை**

அடிமைத்தனத்தில் உழன்று கொண்டிருக்கும் பெண்ணை ஒரு பெண் தான் மீட்டு தமக்கான சுதந்திரம் இதுவல்ல. ஆண்கள் இடுகின்ற கட்டளைகள் எல்லாம் பெண்களின் பணியல்ல என்பதை பெண்தான் உணர்த்துகிறாள். அதற்காக ஆண்கள் செய்யும் எல்லா தவறுகளும் பெண்ணடிமைத்தனம் என்று கூறமுடியாது. பெண்ணுக்கான சுதந்திரம் அங்கு பறிக்கப்படுகிறது எனும்போது அவ்விடத்தில் பெண்ணியம் பேசு பொருளாகிறது. ஆணும் பெண்ணும் சமம் என்பதை உணர்த்துகிறது. பெண்ணியத் திறனாய்வு என்பதற்கு, "இலக்கியத்தில் பெண்ணை மையமாக வைத்து தொலைநோக்கு ஆய்வு மேற்கொள்வது" என்று மேக்கிஹம் என்பார் விளக்கம் தருவதாக பெண்ணியம் என்ற நூலில் பிரேமா அவர்கள் கூறியுள்ளார். அவ்வகையில் அம்பை அவர்களின் இச்சிறுகதை பெண்ணை மையமாக வைத்தே எழுதப்பட்டுள்ளது. 'அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமையாக்க முயல்பவர் பித்தராம்' என்ற பாரதியின் கவிதை, ஆணுக்கு நிகராக அறிவு கொண்ட பெண்ணை அடிமையாக்க நினைக்கும் எல்லோரும் மூடர்களே என்பதை உணர்த்துகிறது.

**குறிப்புகள்**

[1] அம்பை. *வீட்டின் மூலையில் ஒரு சமையலறை*, காலச்சுவடு பதிப்பகம்.

[2] அம்பை. *வெளிப்பாடு.* https://archive.org./details/orr-11824_Velippaadu டிசம்பர் 23, 2024 அன்று அணுகப்பட்டது.

[3] பாரதியார். *பாரதியார் கவிதைகள்.* ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை -17.

[4] பிரேமா, இரா, முனைவர். *பெண்ணியம்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.